வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவணகுமார்

தேதி 11.2.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

சுகாதாரம், கல்வி, விவசாயம், போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம் செயற்கை நுண்ணறிவு லட்சகணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் 10-ஆவது இடத்தில் இருந்து 5-ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறி உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவை நாளை காலை 9.30 மணிக்கு கூடும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பான இணையதள தினம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கம் நடைபெற்றது.

மோடி-செயற்கை நுண்ணறிவு

சுகாதாரம், கல்வி, விவசாயம், போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம் செயற்கை நுண்ணறிவு லட்சகணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு செயல் உச்சிமாநாட்டில் அந்நாட்டு அதிபர் திரு இமானுவேல் மேக்ரானுடன் இணைந்து தலைமை தாங்கி உரையாற்றிய அவர் செயற்கை நுண்ணறிவு கட்டமைக்கப்படாத வேகத்தில் வளர்ந்து வருவதாகவும் அதை நிர்வகிக்க தேவையான விதிமுறைகளை வகுக்க வேண்டியது அவசியம் என்றும் கூறினார். பொருளாதாரம் பாதுகாப்பு மற்றும் சமுதாயத்தில் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் நீண்ட கால தாக்கம் குறித்து பிரதமர் உரையாற்றினார். இணையதள பாதுகாப்பு தவறான மற்றும் போலி தகவல்கள் தொடர்பான கவலைகளை பகிர்ந்து கொண்ட பிரதமர் தொழில் நுட்பம் பயன் உள்ளதாக அமைவதற்கு உள்ளூர் அமைப்புகள் தொழில் நுட்ப அறிவுடன் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அரசு முறைப்

பயணமாக பிரான்ஸ் நாட்டிற்கு நேற்று புறப்பட்டுச் சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடி அங்கு நாளை வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். அதன் பிறகு 2 நாள் பயணமாக அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

*மோடி*

கடந்த 10 ஆண்டுகளில் 10-ஆவது இடத்தில் இருந்து 5-ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறி உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். டெல்லி துவாரகாவில் உள்ள யஷ்ஷோ பூமியில் இந்திய எரிசக்தி வாரம் 2025-ஐ இன்று காலை காணொளி காட்சி மூலம் தொடக்கி வைத்துப் பேசிய பிரதமர் கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் சூரிய மின்சக்தியின் உற்பத்தி திறன் 32 மடங்கு அதிகரித்து உள்ளதாக கூறினார். இதன் மூலம் இந்தியா உலகின் 3-ஆவது பெரிய சூரிய மின்சக்தி உற்பத்தி நாடாக மாறி உள்ளதாகவும் தெரிவித்தார். இந்தியாவின் புதைப் படிவ எரிபொருள் அல்லாத எரிசக்தி திறன் 3 மடங்காக அதிகரித்து உள்ளது என்றும், பாரீஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளை அடைந்த முதல் ஜி-20 நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா தனது சொந்த வளர்ச்சியை மட்டுமல்லாமல் உலகின் வளர்ச்சியையும் முன்னெடுத்துச் செல்வதில் நமது எரிசக்தி துறையின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாக உள்ளது என்றார். எரிபொருளில் எத்தனால் கலப்பு குறித்துப் பேசிய பிரதமர் திரு மோடி தற்பொழுது நாம் 19 சதவிகித எத்தனால் கலப்பு செய்து வருவதாகவும் இது அந்நிய செலாவணியை சேமிக்க உதவுகிறது என்றும் தெரிவித்தார். விவசாயிகளுக்கு கணிசமான வருவாயை ஈட்டித் தருவதோடு கரியமில வாயுவின் வெளியேற்றத்தை கணிசமாக குறைத்துள்ளது என்றும் கூறினார். இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் 20 சதவிகித எத்தனால் கலப்பு என்ற இலக்கை அடையும் விதத்தில் இந்தியா செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

**மேக் இன் இண்டியா** திட்டத்தின் கீழ் உள்ளுர் விநியோக சங்கிலிகள் மற்றும் உற்பத்தியை வலுப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக கூறிய பிரதமர் அடுத்த 5 ஆண்டுகளில் நாடு முக்கிய மைல் கற்களை கடக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்திய எரிசக்தி வார விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாநாட்டில் உரையாற்றிய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி பிரதமரின் உஜ்வாலா திட்டம், நகர்புற எரிவாயு கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் சூரிய பயன்பாடு மூலம் இந்தியாவில் சமையல் பணிகள் 100 சதவிகிதம் தூய்மையான எரிசக்தி மூலம் மேற்கொள்ளப்படுகிறது என்று கூறினார்.

*பண்டிட் தீன்தயால்*

பண்டிட் தீன்தயால் உபாத்யாயா நினைவு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில் பண்டிட் தீன்தயாள் இந்திய நாட்டின் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தொலைநோக்கு சிந்தனையாளர் என்று தெரிவித்துள்ளார். சமூகத்தின் கடை கோடி மனிதரையும் உயர்த்தும் வகையில் பண்டிட் தீன் தயாள் உபாத்யாயாவின் தத்துவம் இருப்பதாகவும் வலுவான தேசத்தை கட்டமைக்கும் வகையில் குடிமக்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிப்பதாகவும் உள்ளது என குறிப்பிட்டுள்ளார். முன்னேற்றம் மற்றும் ஒற்றுமைக்கான பணிகளில் பண்டிட் தீன்தயாளின் தியாகமும், இலட்சியங்களும் நமக்கு வழிகாட்டும் சக்தியாக தொடர்கின்றன என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் தாய் நாட்டின் பெருமையை மீட்டெடுப்பதற்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா என்று குறிப்பிட்டுள்ளார். புதுடெல்லியில் உள்ள பிஜேபி தலையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அக்கட்சியின் தலைவர் திரு ஜேபி நட்டா உள்ளிட்டோர் பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*ராஜ்நாத் சிங்*

பலவீனமான நிலையில் இருந்து கொண்டு, சர்வதேச அளவில் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்ட முடியாது என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். பெங்களுருவில் நடைபெறும் ஏரோ இந்தியா விமான கண்காட்சியை ஒட்டி, இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர் அதிகரித்து வரும் மோதல்கள் நமது உலகத்தின் எதிர்காலத்தை நிலையற்றதாக மாற்றுகின்றன என்றும் மாறிவரும் பாதுகாப்பு சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதுமையான அணுகுமுறைகளையும் வலுவான கூட்டாண்மையும் தேவைப்படுவதாக தெரிவித்தார். உலக அரங்கில் இந்தியாவின் பங்களிப்பு என்பது அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதாக அமையும் என்றார். பாதுகாப்பு தொடர்பான திறன்களில் மாற்றத்தைக் கொண்டு வர இந்தியா மிகவும் கடுமையாக உழைத்து வருகிறது என்றும் கூறினார். பாதுகாப்புத் துறையில் முதலீடு மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கு ஏற்ற கொள்ளைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

*புதுச்சேரி சட்டப்பேரவை*

புதுச்சேரி சட்டப்பேரவை நாளை கூட உள்ள நிலையில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் இன்று பேரவை அரங்கை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் நாளை கூடும் சட்டப்பேரவை கூட்டம் காகிதம் இல்லாத கூட்டத் தொடராக இருக்கும் என்றும் இதற்காக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் இருக்கை அருகே சிறிய அளவிலான தொடுதிரை கணினி பொருத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார். புதுச்சேரி சட்டப்பேரவை நாளை காலை 9.30 மணிக்கு கூடும் என்றும் சபாநாயகர் திரு செல்வம் தெரிவித்தார்.

(வாய்ஸ்)

*சிங்கார வேலர்*

சிந்தனை சிற்பி சிங்கார வேலர் அவர்களின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி, வெங்கடசுப்பா ரெட்டியார் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ் பி ரமேஷ், பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமி காந்தன் ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காரைக்காலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மதகடி அருகில் அமைந்துள்ள சிந்தனை சிற்பி சிங்கார வேலரின் திரு வுருவச் சிலைக்கு குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர் அப்பாராவ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*இணைய பயிலரங்கம்*

புதுச்சேரியில் தேசிய தகவலியல் மையத்தின் சார்பில் பாதுகாப்பான இணையதள தினம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கம் கதிர்காமம் இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் இன்று நடைபெற்றது. மக்களிடையே பொறுப்பான முறையில் இணைய பயன்பாட்டை வளர்ப்பது, பாதுகாப்பான இணைய நடைமுறைகள் இணையதள குற்றங்கள் மற்றும் தடுப்பு உத்திகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட இந்த பயிலரங்கில் அரசுத் துறைகளைச் சேர்ந்தவர்கள், மாணவர்கள், பொது மக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். இதேபோன்ற பயிலரங்கம் இன்று

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் லாஸ்பேட்டை சமுதாயக் கல்லூரி ஆகிய இடங்களிலும், காரைக்காலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், ஏனாமில் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அரசு கலைக் கல்லூரியிலும், மாகேவில் சி இ பரதன் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் நடத்தப்பட்டது. பாதுகாப்பான இணையதள தினம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கு நடத்தப்பட்டதன் அவசியம் குறித்து புதுச்சேரி தேசிய தகவலியல் மையத்தின் இயக்குநர் திரு கல்யாண சுந்தரம் கூறுகையில்

(வாய்ஸ்)

*காரைக்கால்-ஆய்வு*

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர் அப்பாராவ் காமராஜர் வளாகத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகங்களில் இன்று ஆய்வு மேற்கொண்டார். சிறார் நீதிக் குழுமத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர் அங்கு பணிபுரியும் அதிகாரிகளிடம் அவர்களின் பணிகளைப் பற்றியும், சிறார்களின் குற்றங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து குழந்தைகள் நலக் குழுமம், ஆதிதிராவிடர் நலத்துறை, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். அந்த ஆய்வின் போது அரசு அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களுக்கு சுகாதாரத்தை உறுதி செய்யும் வகையில் சுத்தமான கழிப்பறைகள், பொது மக்கள் அமர்வதற்கான நாற்காலிகள் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

*தைப் பூசம்*

தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள முருகன் கோவில்களில் தைப்பூசம் இன்று பாரம்பரிய உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்பட்டது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற அண்டை நாடுகளிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திலும் தைப்பூச விழா அங்கு வாழும் தமிழ் மக்களால் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

*டென்னீஸ்*

டெல்லி ஓப்பன் டென்னீஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்திய வீரர் முகுந்த் சசிகுமார் முன்னேறி உள்ளார். இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் பிரான்சின் சாஷா வெயன்பர்க்கை 4-க்கு 6, 6-க்கு 2, 6-க்கு 0 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார். நாளை நடைபெறும் அடுத்த சுற்று ஆட்டத்தில் பெல்ஜியத்தின் மைக்கேல் கீட்சை, முகுந்த் சசிகுமார் எதிர்கொள்கிறார்.

*அமித் ஷா*

சைபர் குற்றங்கள் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள 4-அம்ச நிலைப்பாடுகளுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று சைபர் பாதுகாப்பு மற்றும் சைபர் குற்றங்கள் தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர் சைபர் குற்றங்கள் இல்லாத நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கு முனைப்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார். சைபர் குற்றங்கள் குறித்து தொடர்பு கொள்ள செயல்பாட்டில் இருக்கும் 1930 என்ற தொலைபேசி எண் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் கூறினார்.

சிந்தித்து செயல்படுவோம் என்ற பிரதமரின் தாரக மந்திரத்தை பின்பற்றுவதன் மூலம் இணைய வழி குற்றங்களை பெருமளவில் தடுக்க முடியும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சுகாதாரம், கல்வி, விவசாயம், போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம் செயற்கை நுண்ணறிவு லட்சகணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் 10-ஆவது இடத்தில் இருந்து 5-ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறி உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவை நாளை காலை 9.30 மணிக்கு கூடும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பான இணையதள தினம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கம் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------